**DATED : 26/09/2025 Case No. : OS.No. 440/2024**

**பெயர் - திரு தனசிங்( Pw1)**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை -**

1) என்னுடைய சொந்த ஊர் தையல்குணாம்பட்டினம் ஆகும். எந்த காலக்கட்டத்தில் முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள முகவரிக்கு, நான் எப்போது குடிபெயர்ந்தேன்? என்றால் 2016 ல் வீடு கட்டி குடிபெயர்ந்தேன்.

2) மேற்படி இடத்தை நான் 2004 ல் கிரயம் பெற்றேன். இந்த விவரத்தை நான் என்னுடைய முதல் விசாரணை வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா? என்றால் கூறியுள்ளேன்.

3) மேற்படி இடத்தை நான் யாரிடமிருந்து நான் வாங்கினேன் என்றால் K.A. ராமலிங்கம் என்ற பவர் ஏஜண்டின் மூலம் கிரயம் பெற்றேன். நான் அன்னை அபிராமி மனைப்பிரிவில் தான் மேற்படி இடத்தை கிரயம் வாங்கினேன் என்றால் சரிதான்.

4) எத்தனையாவது மனையை கிரயம் வாங்கினேன் என்றால் 31 வது மனையை கிரயம் வாங்கினேன். நான் வாங்கிய 31 வது மனைக்கு கிழக்கில் உள்ள மனையை யார் வாங்கினார் என்று எனக்கு தெரியாது. அது கரம்பாக கிடந்தது. நான் கிரயம் வாங்கும் போது என் மனையை சுற்றிலும் யாரும் கிரயம் பெறாமல், சுற்றிலும் காலியாக தான் கிடந்தது.

5) மேற்கு பக்கம் என்ன இருக்கிறது என்றால் தொலை துாரத்தில் வாய்க்கால் உள்ளது. மேற்படி வாய்க்கால் உள்ள இடம் பட்டா உள்ள இடமா? என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

6) நான் மனையை வாங்க போவதற்கு முன்பு வில்லங்கம் பார்த்து வாங்கினேனா என்றால் வில்லங்கம் பார்த்து தான் வாங்கினேன்.

7) கிரய பத்திரத்தில் யார் சாட்சி கையொப்பம் செய்தனர் என்று தெரியுமா?

என்றால் தெரியும். குப்புசாமி மற்றும் மணி ஆகியோர் சாட்சி கையொப்பம் செய்தனர். குப்புசாமி தற்போது இறந்து விட்டார். மணியின் தந்தை பெயர் எனக்கு தெரியாது.

8) மணி என்பவர் சாட்சி கையொப்பம் போடவில்லை என்று சொன்னால் சரியல்ல. மணி அப்போது வந்தார். நான் இடத்தை வாங்கிய பின்பு சுற்றி வேலி அமைத்து விட்டேன் என்று சொன்னால் சரியல்ல. தென்புறமும், வடபுறமும் காம்பவுண்ட் வைத்தேன். மற்ற இரு புறமும் தான் வேலி வைத்திருந்தேன்.

9) இடம் வாங்கும் போது அளந்து பார்த்து தான் வாங்கினேன். வேலி எந்த வருடம் வைத்தேன் என்று ஞாபகமில்லை. நான் மனை வாங்கிய காலத்தில், வேறு யாரும் அங்கு மனை வாங்கவில்லை என்று சொன்னால், வாங்கியிருக்கலாம் அது பற்றி எனக்கு தெரியாது.

10) எனது மனைக்கு கிழக்கு புறம் யார் மனையை வாங்கினார்கள் என்று விசாரித்து தெரிந்து கொண்டேனா? என்றால் இல்லை.

11) நான் மனையை வாங்கிய காலத்தில் அளவீடு செய்த போது, கிழக்கு புறத்தில் உள்ள மனையை யார் வாங்கினார்கள் என்று தெரிந்துகொண்டேனா? என்றால் இல்லை. அது கரம்பாக தான் கிடந்தது.

12) பொதுவாக ஒரு இடத்தை அளந்தால், அக்கம் பக்கத்தில் உள்ள இடத்தை பற்றி தெரிந்து கொள்வார்கள் என்றும், நான் வழக்கிற்காக பொய் கூறுகிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

13) 1 ம் பிரதிவாதி வேனுகோபால் எப்போது மனை கிரயம் பெற்றார் என்று எனக்கு தெரியுமா? என்றால் தெரியாது. அவர் எப்போது வீடு கட்ட வந்தார் என்றால் 2023 ல் தான் வந்தார். எனக்கு சரியாக வருடம் ஞாபகமில்லை.

14) 1 ம் பிரதிவாதி வேனுகோபால் வீடு கட்ட ஆரம்பித்த போது எங்களுக்குள் மன வருத்தம் இருந்ததா என்றால் இல்லை. 1 ம் பிரதிவாதி பூமி பூஜை செய்த போது,

நானும் எனது மனைவியும் அதில் கலந்து கொண்டோமா? என்றால் கலந்து கொள்ளவில்லை.

15) நான் என்ன பரிகாரம் கோரி, 1ம் பிரதிவாதி மீது வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால், எனது பட்டவை ரத்து செய்து அவர் பெயருக்கு மாற்றி விட்டார். அதனை ரத்து செய்யக் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

16) நிஷா என்பவரை எதற்காக வழக்கில் 2ம் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன்? என்றால் 1ம் பிரதிவாதி வீடு கட்டும் போது நான் தடுத்ததால், அவர் வந்து ஏன் தடுக்குறீர்கள் என்று கேட்டதால், வழக்கில் சேர்த்துள்ளேன். அது குறித்து நான் எனது மனுவில் கூறியுள்ளேனா? என்றால் கூறியுள்ளேன்.

17) நான் கிரயம் பெற்ற மனைக்கு மூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அபிராமி மனைப்பிரிவில், நான் மனை வாங்கும் போது எனது மனைக்கு தென்புறத்திலும், வடபுறத்திலும் உள்ள அளவுகள் ஒரே அளவுகளா என்று கேட்டு தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை.

18) என்னிடம் மனையை விற்ற நபர்களை இவ்வழக்கில் தரப்பினர்களா சேர்த்துள்ளேனா? என்றால் இல்லை.

19) எனது மனைக்கு பின் பக்கம் 1ம் பிரதிவாதி எப்போது மனையை வாங்கினார் என்று தெரிந்து கொண்டேனா? என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி வாங்கிய இடத்தில் எனது இடம் உள்ளது என்று எப்போது தெரிந்து கொண்டேன் என்றால், 2023ல் போர் போட்ட பிறகு, கடைக்கால் போட வரும் போது தான் தெரிய வந்தது. சாட்சி மீண்டும் அந்த வருடம் குறித்து சரியாக நினைவு இல்லை என்று கூறுகிறார்.

20) மேற்கண்ட சம்பவத்தின் போதாவது 1ம் பிரதிவாதி யாரிடம் கிரயம் வாங்கினார் என்று தெரிந்து கொண்டேனா? என்றால் இல்லை.

21) 2016ல் செல்வம் என்பவர் வந்து 1ம் பிரதிவாதி கிரயம் பெற்ற இடத்தை

என்னிடம் வாங்கி கொள்கிறாயா? என்று கேட்டார். நான் இடம் குறைவாக உள்ளதால் வேண்டாம் என்று கூறி விட்டேன். அப்போதாவது நான் எனது இடம் குறித்து வில்லங்கம் பார்த்தேனா? என்றால் இல்லை.

22) எனது தரப்பு ஆவணமான ம.சா.ஆ. 17 ல் வில்லங்கம் பார்த்த காலக்கட்டத்தில், மேற்படி சொத்தில் யார் யார் கிரயம் வாங்கினார்கள், எவ்வளவு விஸ்தீரனம் வாங்கியுள்ளார்கள் என்று தெரிந்து கொண்டேனா? என்றால் இல்லை.

23) நான் கிரயம் வாங்கிய மனை எண் 31 க்கு, மேற்கே தரிசு ஓடை புறம்போக்கு நிலம் உள்ளதா? என்றால் உள்ளது. அது வேறு சர்வே எண்ணில் உள்ளது. அந்த இடத்தை நான் தான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரிதான்.

24) 2023 ல் குறிஞ்சிப்பாடி பேரூராட்சி, மேற்படி வாய்க்காலை சீர்படுத்தினார்கள் என்றால் சரியல்ல. அவர்கள் வரவே இல்லை.

25) அந்த வாய்க்கால் புறம்போக்கை பேரூராட்சி எடுத்து சீர் செய்து விட்ட படியால் தான், நான் கிழக்கு பக்கம் உள்ள 1 ம் பிரதிவாதியிடம் இடம் போய் விட்டதாக கூறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

26) நான் மனை கிரயம் வாங்கி விட்ட காலக்கட்டத்திலேயே, மனைக்கு பட்டா வாங்கிவிட்டேன் என்றால் சரிதான். 1 ம் பிரதிவாதி அவர் இடத்தை அளந்து, அவரது இடத்திற்கு மட்டும் பட்டா வாங்கியுள்ளார் என்றால் சரியல்ல. அவர் என்னுடைய இடத்திற்கும் சேர்த்து, எனது பட்டாவை ரத்து செய்து, அவர் பெயரில் பட்டா பெற்றதால் தான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்தேன்.

27) அப்போதாவது 1 ம் பிரதிவாதி வேனுகோபால் யாரிடமிருந்து எவ்வளவு இடம் கிரயம் வாங்கினார் என்று தெரிந்து கொண்டேனா? என்றால் இல்லை. 1 ம் பிரதிவாதி வேனுகோபாலின் மனையை 1992 ம் வருடம், மல்லிகா என்பவர் கிரயம் வாங்கி, அதன் பின்பு 2012 ம் வருடம் செல்வம் என்பவர் கிரயம் வாங்கி, அதன் பின்னிட்டு 3 வதாக தான் 1 ம் பிரதிவாதி கிரயம் பெற்றார் என்ற விவரம் எனக்கு தெரியுமா?

என்றால் தெரியாது.

28) எனது மனையின் தென்புறம், வடபுறம் தவிர்த்து மற்ற அனைத்து மனைகளும் 1800 சதுர.அடி என்பது எனக்கு தெரியுமா? என்றால் தெரியாது.

29) நான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்றால் 1 ம் பிரதிவாதியின் இடத்தை முன் கிரயம் பெற்ற, முதல் மற்றும் இரண்டாவது நபர்களான, மல்லிகா மற்றும் செல்வம் என்பவர்கள் மீது தான் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

30) 1 ம் பிரதிவாதி தான் கிரயம் பெற்ற இடத்தை, கூடுதலாக பட்டா மாற்றம் செய்தது தொடர்பாக நான் ரத்து செய்ய மனு ஏதும் தாக்கல் செய்யவில்லை என்று சாட்சி கூறிவிட்டு பின்பு மாவட்ட ஆட்சியர், வருவாய் கோட்டாட்சியர் ஆகியோரிடம் மனு கொடுத்துள்ளேன் என்று கூறுகிறார். அப்போதாவது 1 ம் பிரதிவாதிக்கு முன் கிரயம் கொடுத்துள்ளவர்களை நான் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அவர் யாரிடம் கிரயம் வாங்கினார் என்று எனக்கு தெரியவில்லை.

31) எனக்கு மனையை விற்பனை செய்த நபரை நான் தரப்பினராக சேர்த்துள்ளேனா? என்றால் சேர்க்கவில்லை. ஆனால் அவர்களிடம் சென்று நான் கேட்டேன். நான் வழக்கு தாக்கல் செய்த காலக்கட்டத்தில் 1 ம் பிரதிவாதி அவர் கிரயம் வாங்கிய இடத்தில் வீடு கட்டி பூசு பூசி கொண்டிருந்தார்கள் என்றால் சரிதான். ஆனால் நான் ஆரம்பத்தில் இருந்தே தடுத்தே கொண்டே இருந்தேன். என்னை ஆட்களை வைத்து மிரட்டி கொண்டே இருந்தார்கள்.

32) கடைக்கால் போடும் போதே 1 ம் பிரதிவாதி வீடு கட்டுவதை தடுத்து, தாவா தாக்கல் செய்தேனா? என்றால் இல்லை. நான் கிரயம் வாங்கிய காலக்கட்டத்தில், சக்குபந்தி போடப்பட்டு எனது மனைக்கு கிழக்கு பக்கம் யாருடைய மனை உள்ளது என்று தெரியுமா? என்றால் தெரியாது.

33) 1 ம் பிரதிவாதி கிரயம் வாங்கிய போது, அவரது மனைக்கு மேற்கு புறம்

தனசிங்கு மனை உள்ளது என்று குறிப்பிட்டு வாங்கியுள்ளார், என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2023 ல் தான் தெரிந்து கொண்டேன்.

**(நீதிமன்ற நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது )**